**O.S. NO 48/2023**

**Dated.16.07.2025**

**வா.சா.1 ஜெர்ரி செபாஸ்டியன்**

**1,2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1, 2 பிரதிவாதிகள் இருவர் மீதும் விவசாயம்தொடர்பாக ஒரு கடன் வழுங்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். மேற்கண்ட கடன் தொடர்பாக அ.வ எண். 49/2023 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் கணவன் மனைவி ஆவார். 3ம் பிரதிவாதி தாவா கடனுக்கு ஜாமீன் தாராக உள்ளார். வழக்கில் எந்த இடத்திலும் கடனுக்கு 3ம் பிரதிவாதி ஜாமீன்தாராக உள்ளார் என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் 3ம் பிரதிவாதி பொறுப்புறுதி ஆவணம் எழுதிகொடுத்தாக குறிப்பிட்டுள்ளோம். 3ம் பிரதிவாதியின் அவரது கடன் தகுதியை வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 04.11.2015 ல் பிரதிவாதி பெயரில் ரூ.5 லட்சம் கடனாக கொடுக்கப்பட்டது. அதனுடைய கடன் கணக்கு என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 என்றால் சரிதான். மேற்படி கணக்கு எண். CKLS150003 ஆகும். மேற்படி கடன் கணக்கு எண் எப்போதும் மாறாது என்றால் கார்பரேசன் வங்கியாக இருக்கும்போது மேற்படி கணக்கு எண் இருந்தது. அதன்பிறகு யூனியன் வங்கியாக மாறிய போது 15 லக்க கணக்கு எண்ணாக மாறியது. மேற்படி ரூ.5 லட்சத்தையும் 04.11.2015 ல் பிரதிவாதிகளுக்கு கொடுத்தோம். வா.சா.ஆ.8 கணக்கு பட்டியலில் 07.11.2015 ல் ரூ.2 லட்சமும், 12.11.2015 லும் ரூ.3 லட்சமாக இரண்டு தவணைகளாக கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் மேற்படி இரண்டு தவணைகள் கொடுக்கப்பட்டதாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். என்றைய தினம் கடன் கொடுக்கிறோமோ அன்றைய தினத்தில் இருந்து தான் வட்டி கணக்கீடு செய்வோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ல் 01.10.2015 ல் இருந்து 30.12.2015 வரை வட்டி கணக்கீடு செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ன் படி கடன் கொடுக்கும் தேதிக்கு முன்னரே வட்டி கணக்கீடு செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். வட்டி இரண்டு அரையாண்டுகளுக்கு ஒரு முறை தான் கணக்கீடு செய்யப்படும் அதன் படி வா.சா–ஆ.8 வட்டி கணக்கீடு உள்ளது. மேற்படி சங்கதியை பிராதில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

3ம் பிரதிவாதி எவ்வித ஒப்புகை ஆவணத்தில் கையொப்பமும் செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் 2வது பிரதிவாதி கையொப்பம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். விவசாயம் சார்ந்த கணக்குகளை 3ஆண்டுகளுக்குள் ஒரு முறை கணக்கை புதுப்பித்து கொள்ள வேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ.6,7 ஆவணங்கள் பிரதிவாதிகளால் கையொப்பம்செய்து கொடுக்கவில்லை என்றாலும் நாங்கள் கடனை பெறவேண்டி எங்களால் உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. 2,3ம் பிரதிவாதிகளை பொறுத்து தாவா வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6,7 ஆவணங்கள் 1, 2 பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்ட ஆவணங்கள் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6,7 ஆவணங்களில் உள்ள 1,2 பிரதிவாதிகளின் கையொப்பம் வா.சா–ஆ.1லிருந்து 5 கையொப்பங்களுக்கு முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் விவசாய கடன்களுக்குரிய வட்டி விகிதங்களை விட கூடுதல் வட்டிவிகிதங்களுடன் கடன் வழங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் செலுத்திய உண்மையான கடன்களை காண்பிக்காமல் எங்களது கடன் கணக்கு விவரங்கள் உள்ளது என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் ரூ–4லட்சத்திற்கு மேல் கடன் செலுத்தியுள்ளனர் என்றாலும் அதை குறிப்பிட்டு தெரிவிக்காமல் வழக்குரை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. வழகக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**